
# திருமறை ஆசான்

**புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்**

மலர் - 10 மார்ச்- 1997 இதழ் - 3



ானங்கள் தேவனுடைய மகிமையை, வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு
வருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. சங்கீதம் 19:1

வெளியிடுவோர் :
**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30-11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00-12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30-6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15-8.30 | வேத ஆய்வு வகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00-9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பிலாத்து | 1 |
| 2. | கிறிஸ்துவின் நற்செய்தி | 8 |
| 3. | பெண்கள் பகுதி | 13 |
| 4. | சரியான சபை எது? | 14 |
| 6. | இனி என்ன நடக்கப் போகிறது? | 16 |
| 7. | கர்த்தராகிய இயேசுவே, என் இருதயத்தில் வாரும் | 19 |
| 8. | கிறிஸ்துவின் சபை வசனத்தின் படியான அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டுள்ளது | 22 |
| 9. | 4. பிரசங்கியின் பிரசங்க வகைகள் | 25 |
| 10. | எல்லா சபைகளிலும் இருக்கிற நல்லவர்கள் எல்லாம் இரட்சிக்கப்படுவார்களா? | 28 |

# THIRUMARAI AASAAN

Editor
S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 10 MARCH - 1997 issue -3


ஆசிரியவுரை

## "பிலாத்து"

கிறிஸ்தவ மத உலகில் அநேகருக்கு அறிமுகமான நபர்களில் இந்தப் பிலாத்தும் ஒருவன். இவனைப் பற்றி வேதாகமம் நற்சாட்சி கொடுக்காவிட்டாலும் கூட, கிறிஸ்தவ சமுதாயத்தால் வெகுவாக அறியப்பட்டிருக்கிறான். இவனைப் பற்றி லூக்கா 23:1-26 வசனங்களில் நாம் காணலாம். இவன் செய்த கொடுஞ்செயலினிமித்தம் இவனை நினைக்கவே கூடாது என எண்ணினாலும், மறக்க முடியாத ஒரு இடத்தை இவன் எட்டி விட்டான். தனது துர்ச்செய்கையினால் அபகீர்த்தியடைந்து, பெயரளவில் இன்னும் வாழ்ந்துகொண்டுள்ளான். வருடத்திற்குப் பத்துப் பதினொரு மாதங்கள் இவனை அடக்கி வைத்தாலும், எஞ்சிய ஒரு மாத காலத்துக்கு மேலாக, இவன் பரவலாக வெளியே வந்து சுதந்திரமாக உலா வருவான். இவனெல்லாம் ஒரு மனிதனா என்று ஒதுக்கியவர்களெல்லாம் கூட வேதாகமத்தில சொல்லப்படாத அந்த நாற்பது நாளளவும் இவனைப்பற்றி வேண்டா வெறுப்பாவாகிலும் பேசிக்கொண்டிருப்பர். மனிதனால் ஏற்படுத்தப்பட்ட அந்த விசேஷித்த நாட்களின் முடிவில், இவன் பெயர் படும்பாடு இருக்கிறதே, கேட்பதற்கே பாவமாயிருக்கும்.

இவன் படும்பாடு நமக்கு வருத்தத்தைக் கொடுத்தாலும், இவனுக்காக நாம் பரிதாபப்படத் தேவையில்லையென்றே தோன்றுகிறது. இவனின் இந்தக் கீழ்நிலைக்கு இவனைத் தவிர வேறு யாரும் காரணமல்ல. ஆம், நியாயத்தைப்

புரட்டி, நீதியை எட்டி உதைத்தவன் இவன். இவனைப் போலவே, அநேக சமயங்களில் நம்முடைய வாழ்க்கையின் நிலைக்கும்கூட நாம் தான் காரணமாக உள்ளோம்.

சரி, இயேசுவின் சமூகத்தில், இந்தப் பிலாத்துவை சந்திக்கும் வரை இவன் யாரென்று நமக்குத் தெரியாது. உண்மையாகவே, தான் எப்படிப் பட்டவன் என்று அவனுக்குமே தெரியாது. இவனுடைய வாழ்க்கையின் நிலையும், ஆளுகையின் தன்மையும் இயேசுவின் முன்பாக வெட்ட வெளிச்சமாகியது. தன்னுடைய இராஜ்யபாரத்தின் காலத்தில் எத்தனையோ முடிவுகளை எடுத்து, அவைகளுக்கு இராயனுடைய ஒப்புதலையும், ஜனங்களின் பாராட்டுகளையும் பெற்றிருந்தாலும் இயேசுவண்டையில் தான், அவன் முடிவுகளின் உண்மைத் தன்மை உலகிற்கு அம்பலமானது.

பிலாத்துவை வாய்கூசாமல் பேசி, பக்தி வேஷம் போட்டுத் திரியும் நம்முடைய வாழ்க்கையிலும், வாழ்க்கையின் முடிவிலும் அப்படித்தான் நடக்கப் போகிறது. உலகத்தின் பார்வையில் பெரும்பாலானவர்களின் அங்கீகாரத்தை நாம் பெற்றாலும், அவைகளின் நிஜத் தன்மை அவரண்டையில் வரும்போது தான் வெட்ட வெளிச்சமாகப் போகிறது. சந்தேகமில்லை.

இவனுடைய வாழ்க்கையை இன்னும் கொஞ்சம் உற்று நோக்கி, நம்முடைய வாழ்க்கைக்கு ஏதாவது பாடங்கள் கிடைக்கிறதா என்று பார்ப்போம்.

## I. *பிலாத்து, முற்றிலும் மோசமானவனாக இருக்கவில்லை :*

இக்கருத்தை தைரியமாகச் சொல்ல வேத வசனங்கள் நமக்குத் துணை வருகிறது. ஏனெனில், வஞ்சக எண்ணங்களை மூலதனமாக வைத்து, திட்டமிட்டு இயேசுவைப் பிடித்துச் சென்ற திரள் கூட்டம், இவனைச் சிலுவையில் அறையும் என்று ஏகமனதாக, உரத்த சத்தமாய்க் கூக்குரலிட்ட போதும், உடனடியாக அவைகளுக்கு இவன் மடங்கவில்லை. "ஏன், இவன் என்ன பொல்லாப்பு செய்தான்? மரணத்துக்கு ஏதுவான குற்றம் ஒன்றும் இவனிடத்தில் நான் காணவில்லையே, ஆகையால் நான் இவனைத் தண்டித்து விடுதலையாக்குவேன் என்றான்" (லூக். 23:22)

இதுவரைக்கும் நீதியோடும், நியாயத்தோடும் ஓரளவு ஒட்டி, உரசி வந்த இவன், இதன் பிறகே திரும்பிவர முடியாத அளவுக்கு விலகிப் போனான். குற்றமற்ற இயேசு சிலுவையில் அறையப்படுவதை இவன் விரும்பவில்லையென்றாலும், இறுதியில் நிர்பந்தத்திற்கு அடிபணிந்து போனதால் அவர்களைப் போலவே தானும் ஒரு குற்றவாளியானான்.

அப்படியானால் இவனுக்குள்ளாக, இயேசுவை விடுதலையாக்க வேண்டுமென்ற நல்லெண்ணம் இருந்ததே, அது எந்த வகையானது? இயேசு

குற்றவாளியல்ல என்று ஒரு கட்டத்தில் இவன் மனசாட்சி திடமாகச் சொல்லியது. ஆனால் அதே மனசாட்சி, சில நேரம் கழித்து, அவரைக் கொலைக்கு ஒப்புக்கொடுக்க முழு மனதோடு அனுமதித்தது. நேர்மாறான இந்த நிலைக்கு காரணம் என்ன?

அவனுடைய நீதிக் கொள்கைகளும், ஒழுக்க நெறிகளும் சரியான அடித்தளத்தின் மீது அமையவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. தேவனுடைய வார்த்தைகளின் அடிப்படையில் அவன் தனது கொள்கைகளை வகுத்துக் கொள்ளவில்லை. நீதியான வசனங்களைக் கொண்டு அவன் தனது மனசாட்சியை படிப்பிக்கவில்லை. அப்படிச் செய்திருந்தால் இந்தப்படுபாதகச் செயலுக்கு அவன் உடன்பட்டிருக்கத் தேவையில்லை. தாவீது தேவனுடைய வார்த்தைகளைக் குறித்து என்ன சொல்லுகிறான் பாருங்கள். "உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள் (சங். 119:172) இந்த நீதியான கற்பனைகளைத் தன் வாழ்க்கையில் ஏற்றுக்கொள்ளாமல், மனதின் யோசனைப்படி செயல்பட்டான். பரீட்சைக்கு நிற்பதற்கு உலக அறிவும், மனதின் யோசனைகளும் போதுமனதல்ல என்பது ஏனோ அவனுக்கு விளங்கவில்லை.

எனதருமைச் சகோதரனே! நான் நேசிக்கும் தேவப்பிள்ளையே, உன் நிலை எப்படியுள்ளது? எதனடிப்படையில் உன் வாழ்க்கையின் முடிவை நீ எடுத்துக் கொண்டுள்ளாய்? உலக அறிவும், மனதின் எண்ணங்களும், மனசாட்சியும் உன்னை நீதிக்கு நடத்த முடியாது என்பதை இப்பொழுதாகிலும் புரிந்து கொண்டாயா? பிலாத்து தன் வாழ்நாளில் எத்தனையோ தவறு செய்திருந்தாலும், இயேசுவின் காரியத்தில் அவன் செய்த தவறு, இன்றளவும் பேசப்படுகிறதே, கவனித்தாயா? பூமியுள்ளளவும் பேசப்படும் என்பதை அறிவாயா? அத்தோடு நின்றாலும் பரவாயில்லை. நியாயத்தீர்ப்பின் நாளிலும் அது பேசப்பட்டு, அதின் பலன் நித்திய காலம் வரை தொடர இருக்கிறது என்பதும் உனக்குத் தெரியும்தானே.

அப்படியானால் நாம் என்ன செய்ய வேண்டும்? இயேசுவின் காரியத்தில் நம்முடைய முடிவு எப்படியிருக்க வேண்டும்? பெரும்பாலானவர்கள் செய்கிறார்கள் என்பதற்காகவோ, ஏற்றுக் கொண்டு விட்டார்களென் பதற்காகவோ அல்லது செய்யும்படி நிர்ப்பந்திக்கிறார்கள் என்பதற்காகவோ நாம் எதையும் செய்யாமல் அவைகள் வேத வசனங்களின் அடிப்படையிலானதா எனப் பார்த்து, தீர்மானித்துப் பின்பற்ற வேண்டும். இயேசுவின் காரியத்தில் பிலாத்து தவறு செய்ததைப் போல் நாமும் இயேசுக்கிறிஸ்துவின் காரியத்தில், ஆவிக்குரிய வாழ்க்கையில் தவறு செய்து பிலாத்துவைப் பற்றிப் பேசும் இன்னொரு பிலாத்துவாக மாறிவிடக்கூடாது.

*திருமறை ஆசான்*

மனிதனால் ஏற்படுத்தப்பட்டு, பெரும்பாலானவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நடைமுறையிலிருந்து வரும் பண்டிகைகளுக்கும், விசேஷித்த நாட்களுக்கும், அது லெந்து நாட்களாக இருந்தாலும் வேறெந்த நாட்களாக இருந்தாலும் அவைகளுக்கு வேத வசனங்களின் ஆதாரம் எங்கே உள்ளது? அன்பரே, இயேசுவுக்கடுத்த காரியத்தில் தவறு செய்ய வேண்டாம். இயேசுவுக்கடுத்த காரியத்தில் திரள் கூட்டத்தின் சத்தத்திற்கும், வெகுஜன அபிப்பிராயத்திற்கும் இணங்க வேண்டாம். வேண்டவே வேண்டாம்.

ஒருவேளை, அடிப்படையில் நற்குணம் உள்ளவர்களாக இருந்தும், வேத அறிவு இல்லாதபடியால், முக்கியமான இடத்தில் தவறு செய்து நித்திய மகிழ்ச்சியை இழந்து போகவும் வேண்டாம்.

## II. *பிலாத்து, முயற்சித்தும் தோற்றுப்போனான்?*

அநேக சமயங்களில், ஒரு காரியத்திற்காக ஒருவன் செய்யும் முயற்சி, அவனுடைய நல்லெண்ணத்திற்கு ஆதாரமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆகவே, ஒருவனின் முயற்சியை அடிப்படையாக வைத்து அவனை நியாயந்தீர்க்கலாம் என நாம் எண்ணுகிறோம். ஆனால், இப்படி எண்ணுவது தவறானதென்று இந்தப் பிலாத்து சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துவிட்டான்.

பிலாத்து முயற்சித்தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் பிரச்சினையென்னவெனில் அவன் எந்த அளவிற்கு முயற்சித்தான் என்பதே. மற்றும் முயற்சியின் பலன் என்ன என்பது தான் கேள்வி. நிரபராதியான இயேசு சிலுவையில் அறையப்படக்கூடாது என விரும்பினான் என்பது உண்மை தான். இருப்பினும் தனது முயற்சியில் அவன் தோற்றுப் போனானே அது ஏன்?

முயற்சி இருந்தது. ஆனால் போதுமான அளவுக்கும், தேவையான அளவுக்கும் அது இல்லை. அவனுடைய முயற்சியில் வெற்றி கிட்டும் வாய்ப்பு பிரகாசமாக இருந்தது. இதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. அவரை விடுதலையாக்கவும், சிலுவைக்கு ஒப்புக்கொடுக்கவும் அவனுக்கு அதிகாரமிருந்ததென்பதை நாம் யாவரும் அறிவோம். அப்படியிருந்தும் ஏன் அவரை அடித்து சிலுவைக்கு ஒப்புக்கொடுத்தான். இதுதான் முயற்சியின் முகமா? இல்லை. அங்கே முயற்சி தேவையான அளவுக்கு இருக்கவில்லை யென்பது மறுக்க முடியாத உண்மை. முயற்சியின் கூலியாகிய வெற்றியை உறுதி செய்யும் அளவுக்கும் அது இருக்கவில்லை.

ஒருவேளை, “நான் முயற்சித்தேன்” என்று சொல்லி நம்முடைய தவறுகளிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ள இப்படிப்பட்டதான முயற்சிகள் நமக்கு உதவலாம். ஆனால், அதில் பயன் என்ன? முயற்சிக்கிறேன் என்று ஒப்புக்குச் சொல்லி, பிறகு நியாயத்தை விழுங்கி, நீதியை ஏப்பம் விடுவதற்கு

முயற்சிக்காமலே இருந்து கொள்ளலாமே. இப்படிப்பட்ட முயற்சியில் தேவன் பிரியப்படுவாரா? நீங்களே சொல்லுங்கள்.

நான் மாத்திரம் பிலாத்துவின் இடத்தில் இருந்திருந்தால், இயேசுவை உடனடியாக விடுவித்திருப்பேனே, பாவி, இப்படிச் செய்துவிட்டானே என்று குமுறுகிறீர்களா? பொறுங்கள். ஒரு உண்மையைச் சொல்கிறேன்? மெய்யான சத்தியத்திற்காய் "முயற்சி" எடுக்கும் விஷயத்தில், நாம் ஒவ்வொருவரும், ஒரு பிலாத்துவாகவே உள்ளோம். முதல் நூற்றாண்டுப் பிலாத்துவுடன் அநீதி குழி தோண்டிப் புதைக்கப்பட்டாயிற்றென்று நிம்மதிப் பெருமூச்சு விடுவதற்கில்லை. ஆவிக்குரிய வாழ்வைப் பொறுத்தளவில் நம்மில் அநேகர் எந்த முயற்சியும் எடுப்பதில்லை. இது ஒரு கசப்பான உண்மை. முயற்சி எடுப்பவர்களும் வெற்றி கிட்டும் அளவுக்கு முயல்வதில்லை. பிலாத்துவாகிலும் ஒருமுறை சிலுவைக்கு ஒப்புக் கொடுத்தான். நாமோ அன்றாடம் அவரை சிலுவைக்கு ஒப்புக் கொடுத்துக் கொண்டுள்ளோம்.

என்ன, எங்களுடைய பக்தியை இவ்வளவு குறைவாக மதிப்பிடுகிறீர்களே என்று ஆதங்கப்படுகிறீர்களா? கிறிஸ்தவர்களே, கிறிஸ்தவ சமுதாயமே! உங்களையும், உங்கள் முயற்சியையும் நான் மனதார மதிக்கிறேன். தேவனை எப்படியாவது பிரியப்படுத்தவேண்டுமென்று விரும்பி நீங்கள் அநேக காரியங்களைச் செய்கிறீர்கள். குறிப்பாக லெந்து நாட்களென்று இல்லாத நாட்களை உருவாக்கி உங்கள் பக்தியின் மேம்பாட்டுக்காகப் பாடுபடுகிறீர்கள். இல்லையென்று சொல்லவில்லை. அந்நாட்களில் மாமிசம் தின்பதைத் துறக்கிறீர்கள். பெண்கள் பூ வைப்பதைக் கூடத் தவிர்க்கிறார்கள். வாலிபர்கள் காவி உடைகூட சில இடங்களில் அணிந்து கொள்கிறார்கள். இன்னும் இந்த நாட்களில் அன்றாடம் மாலை வேலைகளில் விசேஷ கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்படுகிறது. மக்களும் ஆர்வத்தோடு, கையிலே வேதாகமத்தை ஏந்தி அங்கும் இங்கும் போகிறார்கள். இவ்வளவும் பாராட்டுக்குரியவைகளே. யாரும் இல்லையென்று சொல்லவில்லை.

ஆனால், இவை யாவும் நீதியை நிலைநாட்டப் போதுமானதாக இல்லையே. நீதியாக இருக்க வேண்டுமென்று இவ்வளவு செய்தும் இறுதியில் நீதி நம்மைவிட்டு விலகிப் போகிறதே, ஏன்?

பரமபிதாவின் உன்னத நோக்கத்தை நாம் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையே ஏன்? இயேசுவை தேவன் எதற்காக இந்தப் பூமிக்கு அனுப்பினார் என்பது இன்னும் விளங்கவில்லையே, ஏன்? இயேசு இப்பூமியில் செய்த போதனைகளின் சாராம்சத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கிறோமே, ஏன்? இயேசுக்கிறிஸ்து எதற்காக உயிர் விட்டார், கல்வாரிச் சிலுவையில் இரத்தம் சிந்தி எதைச் சம்பாதித்தார் என்பது இன்னும் புரியவில்லையே, ஏன்? எதற்காக

சீஷர்களை எருசலேமில் காத்திருங்கள் என்று சொன்னார் என்பதை ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறோமே, ஏன்? பெந்தெகொஸ்தே நாளில் வாக்குத்தத்தத்தின்படி பலத்தோடே ஸ்தாபிக்கப்பட்ட அந்த ஒரு சபை தான் உண்மையான சபை என்பதை நம்ப மனதில் இடம் இல்லையென்கிறோமே, ஏன்? இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அந்த ஒரு சபைக்குள் தான் சேர்க்கிறார் என்று பிரசங்கித்தால். அது பொய் என்கிறோமே, அது எப்படி? அந்த ஒரு சபையை மீட்டுக்கொள்ளத்தான் இயேசுக்கிறிஸ்து மீண்டும் வரப்போகிறார் என்றால் அது, கதை என்கிறோமே, இதெல்லாம் பின் எப்படி? இவைகளெல்லாம் ஏன் புரியாத புதிராக உள்ளது? என்ன வேதாகமம் குழப்பங்களின் புகலிடமா? ஏன்? ஏன்? சொல்லுங்கள்.

கிறிஸ்தவ சமுதாயமே, ஏன் இந்த நிலை? நம்முடைய முயற்சி பிலாத்துவின் முயற்சி போல் இருப்பதே அதற்குக் காரணம். போதுமான அளவுக்கு அது இல்லையென்பதை இப்பொழுதாவது உணர்ந்தால் நல்லது.

இந்நாட்களில் பிலாத்துவின் தவறு பற்றி சத்தமாகப் பேசிவிட்டு, நம்முடைய தவறுகளிலிருந்து சத்தமில்லாமல் நழுவப் போகிறோமா? இயேசுவை விடுதலை செய்யும் அதிகாரம் அவனிடமிருந்தது. அதாவது, முயற்சியில் வெற்றி பெறும் வாய்ப்பு இருந்தது. இருந்தும் தோற்றுப்போனான். நமக்கும் நம்முடைய முயற்சியால் ஆவிக்குரிய வாழ்வில் வெற்றி பெறும் வாய்ப்பு உண்டு. நாம் யாரும் தோற்றுப்போவது தேவனுக்குப் பிரியமானதல்ல. (II பேது.3:9)

அது மாத்திரமல்ல, நாம் வெற்றி பெறப் போதுமான சாதகச் சூழலை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். நன்மை தீமை அறியும் அறிவு நம்மிடம் உண்டு. பகுத்துப்பார்க்கும் தன்மை நம்மிடம் உண்டு. சீர்தூக்கிப் பார்க்கும் திறனும் நம்மிடத்தில் உண்டு. இவை எல்லாவற்றுக்கும் மேலாக பூரணமான தேவனுடைய வார்த்தை நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அவை எல்லாவற்றுக்கும் போதுமானதாக உள்ளது. (IIதீமுத்3:16,17). பரலோகத்திற்குப் போகும் பாதை, இடுக்கமானதாக இருந்தாலும், வேத வசனங்களில் அது தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

நாம் செய்ய வேண்டுவது என்ன? மனிதனை விடுங்கள். இயேசுக் கிறிஸ்து, நமக்கு கொடுக்கும் ஆலோசனையைக் கவனியுங்கள். “வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே. (யோவா. 5:39)

இந்த வசனத்திலிருந்து தவறு எங்கே நடக்கிறதென்று தெரிகிறதா? நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் என்று சொல்கிறார். ஆனால், இன்று எத்தனை பேர் ஆண்டவர் சொன்னபடி வேதத்தை

ஆராய்ந்து பார்க்கிறோம். நித்திய ஜீவனை போகிற போக்கில் பெற்றுக் கொள்ளலாம் என எண்ணுகிறீர்களா? அது முடியாது. இன்று நாம் செய்வதென்ன? மிஞ்சிப் போனால் வேதத்தை வாசிக்கிறோம் அல்லது படிக்கிறோம். அப்படிச் செய்வதே நாம் தேவனுக்காகச் செய்யும் பெரும் தியாகம் என்று எண்ணுகிறோம். பூமிக்குரிய வாழ்வில், கொஞ்ச காலத்தில் முடிந்து போகும் ஒரு உத்தியோகத்தையும், ஒரு மேன்மையையும் பெறவே ஒருவன் ஆழ்ந்து படிக்க வேண்டியது அவசியமாகிறது. அப்படியானால், நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள நம்முடைய முயற்சி, அந்த அளவிற்கு இருக்க வேண்டு மென்பதை நீங்களே நிதானித்துப் பாருங்கள்.

உண்மையை ஆழமாகவும், நீதியை நியாயமாகவும் பார்க்காத படியால் தான், பிலாத்து அநியாயத்திற்கு அடிபணிந்தான். நாமும் வேதம் என்ன சொல்கிறதென்று கவனித்துப் படிக்காவிட்டால் அசத்தியத்திற்கு அடிபணிய நேரிடும். நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனில் நாம் தான் முயன்று, கவனித்து, தியானித்து ஆராய்ந்து படிக்க வேண்டும். பொறுப்பை மற்றவர்களிடம் விடக்கூடாது. ஒருவேளை அவர்கள் மதப்பட்டங்களைப் பெற்றிருக்கலாம். உலகத்தில் பெரிய மனிதர்களென்று சமுதாயத்தின் அங்கீகாரத்தை அவர்கள் பெற்றிருக்கலாம். அரசியல்வாதிகளின் ஆசியைப் பெற்றிருக்கலாம். இவருக்கு எல்லாம் தெரியுமென்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கலாம், மார்க்க ரீதியாக பெருங் கூட்டத்தை வழி நடத்திக் கொண்டிருக்கலாம், வரம் பெற்றவர்கள் என்ற பட்டியலிலும் இடம் பிடித்திருக்கலாம், இன்னும் அவர்கள் யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால், அவர்களல்ல, நாம் தான் நம் ஆத்துமாவிற்கு கணக்குக் கொடுக்க வேண்டும்.

ஆகவே, பிலாத்து தரும் பாடத்தை நாம் கற்றுக் கொள்வோம். சரியான, சமயத்தில் தேவன் நம்மை இடித்துக் காட்டும்பொழுது உணர்வடைவோம். பிலாத்துவின் ஆரம்ப நிலை போல நல்லவர்களாக இருந்தும், நாம் நரகம் போக வேண்டாம். வெற்றியைக் குறிவைக்காத ஒரு முயற்சியை ஒப்புக்காக நாம் எடுக்கவும் வேண்டாம்.

பெயருக்காக அல்ல உண்மையாகவே நல்லவர்களாக இருப்போம். வெற்றியை உறுதி செய்யும் முயற்சியை துணிந்து எடுப்போம். நித்திய ஜீவனை சுதந்தரிப்போம். சுகஜீவிகளாய் என்றென்றும் கிறிஸ்துவுடன் கூட வாழ்வோம்.

கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**S. ராஜநாயகம்**

*திருமறை ஆசான்*

பாடம் -1

# கிறிஸ்துவின் நற்செய்தி

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் நற்செய்தியைப் பற்றி பல இடங்களில் நாம் படிக்கிறோம். பிறர் அதைப் பற்றிக் கூறுவதையும் கேட்கிறோம். பல வழிகளில், நாமே அடிக்கடி நற்செய்தியை சுட்டிக்காட்டுகிறோம். நற்செய்தி என்றால் என்ன? கிறிஸ்துவின் நற்செய்தி என்றால் என்ன? இதற்கு விடைகாண நாம் சுவிசேஷத்திற்குச் செல்வோம். பவுல் எழுதுகிறார். "ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள். அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே." (ரோமர் 10:13-15). எனவே அடிப்படையில், நற்செய்தி என்பது மகிழ்ச்சியான காரியம், இரட்சிப்பு, சத்தியம், வார்த்தை, வாக்குத் தத்தம், நம்பிக்கை என பொருள் படும். கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை இது கூறுவதால், பிற எல்லா செய்திகளிலிருந்தும் மாறுபட்டதும் குறிப்பிடத்தக்க தாகவும் உள்ளது.

இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்ப்பு இவற்றின் அடிப்படையில் இந்த நற்செய்தி அமைந்துள்ளது. அப்போஸ்தலராகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதினார். "அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள். மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்கு பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து..... "(1கொரி15:1-4)தரிசனமானார். ஆனால், இது எப்படி நற்செய்தியாக இருக்கமுடியும்? ஏனென்றால், கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்ப்பு ஆகியவற்றின் மூலமாக ஒருவன் இரட்சிக்கப்பட்டு நித்திய ஜீவனின் நம்பிக்கையை அடைகிறான். அதே

எழுத்தர் மேலும் கூறும் போது, "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்பட்டேன். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது. விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது." (ரோமர் 1:16,17) என்றார்.

நமது அன்றாட வாழ்க்கையில் நல்ல செய்திகள் வரும்போது அவற்றை நாம் அறிகிறோம். சில ஆசீர்வாதமான காரியங்கள் நமக்கு வரும்போது நாம் மிக மகிழ்ச்சி அடைவதோடு நின்றுவிடாமல், பிறரோடு மகிழ்ச்சியை பங்குபோட்டுக் கொள்ளவும் விரும்புகிறோம். இது இயற்கையே. கிறிஸ்துவின் வழியாக வரும் நற்செய்தியிலும் இத்தகைய காரியம் உண்மையாக இருக்க வேண்டும். நாம் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, அவருடைய கிருபையால் இரட்சிக்கப்பட்டிருந்தால் உலகத்திற்கு அதை நாம் அறிவிக்க விருப்பமுடையவர்களாக இருக்க வேண்டும். எனவே தான் கிறிஸ்து கூறினார். "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்சிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்." (மாற்கு 16:15,16)

தேவனுடைய நற்செய்தியைப் பற்றியும் சுவிசேஷம் பேசுகிறது. நாம் படிக்கிறோம். "இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப் பட்டவனுமாகிய பவுல், ரோமாபுரியிலுள்ள தேவப்பிரியரும் பரிசுத்தவான்களாகும் படி அழைக்கப்பட்டவர்களுமாகிய அனைவருக்கும் எழுதுகிறதாவது, நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. இயேசு கிறிஸ்துவைக் குறித்துத் தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பரிசுத்த வேதாகமங்களில் முன்னே தம்முடைய சுவிசேஷத்தைப் பற்றி வாக்குத்தத்தம் பண்ணினபடி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவானவர், மாமிசத்தின்படி தாவீதின் சந்ததியில்பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார். அவர் சகல ஜாதிகளையும், அவர்களுக்குள் இயேசு கிறிஸ்துவினால் அழைக்கப்பட்டவர்களாகிய உங்களையும், தமது நாமத்தினிமித்தம் விசுவாசத்துக்குக் கீழ்ப்படியப் பண்ணும் பொருட்டு, எங்களுக்குக் கிருபையும் அப்போஸ்தல ஊழியத்தையும் அருளிச் செய்திருக்கிறார்." (ரோமர் 1:1-7). அதே கருத்தில், அதே எழுத்தர் தேவனுடைய கிருபையின் நற்செய்தியைப் பற்றி பேசுகிறார். "ஆகிலும் அவைகளில் ஒன்றையும் குறித்துக் கவலைப்படேன். என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன். என் ஓட்டத்தைச்

சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும் படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்" (அப் 20:24). தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையேயுள்ள ஒற்றுமையைப் பற்றியே இந்த வசனப்பகுதிகள் காட்டுகின்றன. நற்செய்தியை உலகத்திற்கு அறிவிக்க கிறிஸ்துவை தேவனே அனுப்பினார். இந்த வகையில் அது தேவனுடைய நற்செய்தி அல்லது கிறிஸ்துவினுடைய நற்செய்தி என குறிப்பிடப்படலாம்.

மீண்டுமாக, அந்த மகிமையான நற்செய்தியைப் பற்றி நாம் படிக்கிறோம். "நித்தியானந்த தேவனுடைய மகிமையான சுவிசேஷத்தின்படி எனக்கு ஒப்புவிக்கப் பட்டிருக்கிற ஆரோக்கியமான உபதேசத்திற்கு எதிரிடையாயிருக்கிற மற்றெந்தச் செய்கைக்கும் விரோதமாய் விதிக்கப்பட்டிருக்கிறது." (1தீமோ 1:11). மீண்டும், "எங்கள் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால், கெட்டுப் போகிறவர்களுக்கே அது மறை பொருளாயிருக்கும் தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்" (2.கொரி 4:3,4) தேவனிடமிருந்தும் கிறிஸ்துவினிடமிருந்தும் நற்செய்தி வந்திருப்பதால், அது மகிமையுள்ளதும், அதாவது, பரலோகத்திற்குரியதும், நித்தியமானதும் எனக் கூறப்படுகிறது.

"யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து காலம் நிறைவேறிற்று. தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று. மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார்." (மாற்கு 1:14,15). இந்தக்காலக் கட்டத்தில் வரப்போகிற இராஜ்யத்தைப் பற்றிய நற்செய்தியை கிறிஸ்துவும் பிறரும் போதித்தனர். வேறு விதமாகக் கூறினால், அது இன்னும் நிறுவப்படவில்லை. ஆனால் விரைவில் நிறுவப்படும் என்று போதித்தனர். பின்னர் நற்செய்தி போதிக்கப்பட்டது. உண்மையில் கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நற்செய்தி போதிக்கப்பட்டு, அக்கட்டளை களுக்குக் கீழ்ப்படிந்தவர்கள் இரட்சிக்கப்பட்டு கர்த்தருடைய இராஜ்யமாகிய சபையில் சேர்க்கப்பட்டனர்.(2,2)

பின்னர், இரட்சிப்பின் நற்செய்தியைப்பற்றி நாம் படிக்கிறோம். எபேசு பட்டணத்து கிறிஸ்தவர்களிடம் பேசும்போது அப்போஸ்தலர் கூறுகிறார். "நீங்களும்உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்."(எபே.1:13). எனவே, நற்செய்தியே

இரட்சிப்பைக் கொண்டு வருகிறது. சில சமயங்களில் நாம் இரட்சிப்பின் திட்டமாகிய நற்செய்தியைப் பற்றி நாம் பேசுகிறோம். ஆனால் அது கர்த்தருடைய திட்டத்தை அல்லது மனிதனை இரட்சிக்கும் வழியை விளக்கும் ஒரு வழிதான்.

அடுத்து சமாதானத்தின் நற்செய்தி நமக்கு உண்டு. ரோமர் 10:15ம் வசனத்தில் "சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள்' என எழுதப்பட்டிருககிறது. "சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அறையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாத ரட்சையை கால்களிலே தொடுத்தவர்களாயும் பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங் களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றுக்கும், மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள்." (எபே 6:14-16). நற்செய்தியானது சமாதானத்தை மன சமாதானத்தை, ஆத்தும சமாதானத்தை, நமக்கடுத்தவர்களோடு சமாதானத்தைக்கொண்டு வருகிறது. கிறிஸ்து சமாதானத்தின் காவலராக இருந்தார். அவருடைய நற்செய்தியானது, தேவனோடு உள்ள அவ்ருடைய சமாதானத்தைப் போன்ற அனுபவத்தைக் கொண்டுவருகிறது. நிச்சயமாக இதுவே நற்செய்தி.

இறுதியாக, நம்பிக்கையின் நற்செய்தியைப் பற்றி நமக்கு சொல்லப்படுகிறது. "முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் க்ண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாமிச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார் நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையை விட்டு அசையாமல், ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும். அந்த சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. அதற்கென்றே பவுலாகிய நான் ஊழியக்காரனானேன்." (கொலோ 1:21-23). நற்செய்திக்குக் கீழ்ப்படிவதின் விளைவாக வாழ்விலும் நித்திய ஜீவனிலும் நம்பிக்கையை ஒருவன் அடைகிறான். இதைப்பற்றித்தான் இந்த எழுத்தர் இங்கு பேசிக்கொண்டிருக்கிறார். வேறு எவ்வழியிலும் நம்பிக்கை வருவதில்லை.

பல சமயங்களில் "எனது நற்செய்தி" என்றோ "நமது நற்செய்தி" என்றே பவுல் பேசுகிறார். என்ன கருத்தில் அவர் இதைச் சொல்லுகிறார்? கர்த்தர் எந்த நற்செய்தியைப் பிறருக்குப் போதிக்கச் சொல்லிக் கொடுத்தாரோ, எந்த நற்செய்தியை அவரும் பிறரும் பெற்றுக் கொண்டார்களோ அதைப்பற்றியே தான் பவுல் குறிப்பிடுகிறார். இதின் காரணமாக அவர் கூறுகிறார்: "எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த

ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் வந்தது; நாங்களும் உங்களுக்குள்ளே இருந்த போது உங்கள் நிமித்தம் எப்படிப்பட்டவர் களாயிருந்தோமென்று அறிந்திருக்கிறீர்களே" (1 தெசெ. 1:5) மேலும், இங்கு சுட்டிக் காட்டிய படியும், ரோமர் 1:16ம் வசனத்தில் கண்டபடியும், நற்செய்தியை விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படிவோரை, அது இரட்சிக்கும் வல்லமை உள்ளதாக இருக்கிறது.

சுவிசேஷ வசனங்களின்படி இதுவே நற்செய்தி. அது எளிமையானது; ஆனால் சக்தி வாய்ந்தது. இன்றைய நாட்களுக்கு ஏற்ப அது நவீனமானதும், கிறிஸ்துவைப் போல வயது அற்றதாகவும் உள்ளது. அது இரட்சிக்கிறது; நம்பிக்கை அளிக்கிறது. ஒரே ஒரு நற்செய்தி மட்டுமே உள்ளது, அது சகலருக்கும் போதிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது அது கிறிஸ்துவினுடையது, தேவனுடையது மகிமையுள்ளது. அது ஆசீர்வாதங்களை பொழிகிறது: சவால் விடுகிறது; அது பொறுப்பைக் கொண்டு வருகிறது; சகலருக்கும் அது தேவையானது இதுவே உண்மையில் நற்செய்தி!

J.C. சோட்.

## பிரிவினை பாவம்

பிரிவினை பாவமாகும். கலா 5:20; 1 கொரி 1:10 17 புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ள திட்டத்தின்படி இல்லாத ஒரு திருச்சபையை ஏற்படுத்துவதோ, அதற்கு உதவி செய்வதோ பாவமாகும். இவ்வாறு தனி மனிதர் செய்தாலும் அல்லது பலர் கூட்டாகச் சேர்ந்து செய்தாலும் பாவமாகும். புதிய ஏற்பாட்டைக் கவனமாய் வாசி. அதில் திருச்சபையைக் கட்டுவதற்கும், நடத்துவதற்கும் உரிய திட்டம் முழுமையாக கொடுக்கப்பட்டிருக்கிறது. இது விஷயத்தில் மனித அறிவை நாடுவது அறியாமை.

பெண்கள் பகுதி

# நீங்கள் தேர்வு செய்யும் பங்கு எது?

லூக்கா 10ம் அதிகாரத்தில் இரு சகோதரிகள் பற்றிய ஒரு சம்பவத்தை நாம் படிக்கிறோம். மரியாள், மார்த்தாள் என்பது அவர்களின் பெயர்கள். மார்த்தாளின் அழைப்பை ஏற்று, இச்சகோதரிகளின் வீட்டுக்கு இயேசு வந்தார். வீட்டில் வந்து அவர் அமர்ந்தபோது, மரியாள் "இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள்" என்பதாக வசனம் நமக்குக் கூறுகிறது. ஆசிரியர்களின் பாதங்களின் அருகில் மாணவர்கள் அமருவது அக்காலத்தில் பழக்கமாக இருந்தது. யாராவது கதை சொல்லும் போது அவர்கள் காலடியில் சிறுவர்கள் அமர்ந்து இன்று கேட்பதில்லையா? அதுபோல இயேசுவிடமிருந்து வரும் சத்தியத்தை அறிந்துகொள்ளும் ஆவலுள்ள மரியாளிடம் இத்தகைய குழந்தைத்தனமான உற்சாகத்தை நாம் காண்கிறோம்.

அவளுடைய சகோதரி மார்த்தாளையோ ஒரு வித்தியாசமான கோணத்தில் நாம் பார்க்கிறோம். மார்த்தாள் அநேக காரியங்களைச் செய்து கொண்டிருந்தாள். அவள் செய்ய நினைத்த ஊழியம் பற்றி கலைந்த மனதுள்ளவளாகக் காணப்பட்டாள். இயேசுவுக்குப் பணிவிடை செய்ய வேண்டுமென அவள் நிச்சயமாக நினைத்தாள். வீட்டுக்காரியங்களெல்லாம் இப்படி இப்படி நடக்கவேண்டுமென அவள் நினைத்திருக்கக்கூடும். இருந்த போதிலும், இயேசுவைப் பொறுத்த வரையில் அது முக்கியமான காரியமாகக் காணப்படவில்லை. இயேசு அவளை நோக்கி, "மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டு கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள் என்றார்".

உங்கள் நிலை என்ன நண்பரே? அநேக காரியங்களைக் குறித்து நீங்கள் கவலைப்படுகிறீர்களா? தேவனுடைய ஊழியத்திற்கு முன்பாக, ஆவிக்குரிய காரியங்களுக்கு முன்பாக, நீங்கள் உலக காரியங்களுக்கு முக்கியத்துவம் தருகிறீர்களா? தேவனுடைய வசனம் இதைப்பற்றி நம்மை எச்சரிப்பதைக் கேளுங்கள். "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினால் உண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினால் உண்டானவைகள். உலகமும் அதின்

இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்." (1 யோவான் 2:15-17)

நாம் நல்ல பங்கை தேர்ந்தெடுக்க மறந்து, உலககாரியங்களில் ஆழ்ந்து போய் விடலாகாது. மரியாளைப் பின்பற்றி நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்து இயேசுவுக்குக் கீழ்ப்படிவோம். நீங்கள் மரியாளா அல்லது மார்த்தாளா?

ரேச்சல் நாயகம்

---

# சரியான சபை எது!?

இந்த உலகத்தில் பல சபைகள் உள்ளன; ஆனால் தேவன் ஒன்றே ஒன்றை மட்டுமே அங்கீகரிக்கிறார் என வேதாகமம் போதிக்கிறது. (எபே. 4:4; கொலோ 1:18). எனவே, ஒரு சபை மட்டுமே சரியானதாக இருக்க முடியும். அது எந்த சபை?

1. கிறிஸ்து கட்டிய அந்த ஒரு சபை. (மத். 16:18)
2. எருசலேமில் தொடங்கப்பட்ட அந்த ஒரு சபை (லூக்கா 24:47; அப். 2)
3. கி.பி. 33ம் ஆண்டு நிறுவப்பட்ட அந்த ஒரே சபை. (அப். 2)
4. கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக் கொண்டிருக்கும் அந்த சபை. (ரோமர் 16:16; 1 கொரி. 12:27; எபே. 1:22, 23).
5. கிறிஸ்து தலைவராக இருந்து ஆளும் ஒரே சபை. (கொலோ 1:18)
6. கிறிஸ்து தமது சொந்த இரத்தத்தால் கிரையங் கொண்ட அந்த ஒரே சபை. (அப். 20:28)
7. கிறிஸ்து எந்த சபைக்காக மரித்தாரோ அந்த ஒரே சபை. (எபே. 5:25)
8. கிறிஸ்து இரட்சகராக இருக்கும் ஒரே சபை. (எபே 5:23)
9. கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்ட ஒரே சபை (மத் 16:18; 1 கொரி 3:11)
10. கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படும் அங்கத்தினர்களைக் கொண்ட ஒரே சபை. (அப். 11:26; அப். 4:12)
11. கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரம் என அழைக்கப்படும் ஒரே சபை. (எபே. 1:22, 23)
12. ஒரே சரீரம் (எபேசியர் 4:4)
13. இரட்சிக்கப்பட்ட மக்களை அவர் சேர்த்துக் கொள்ளும் சபை (அப. 2:47)
14. கிறிஸ்து மீண்டும் திரும்பிதற்காக வருகிறாரோ அந்த ஒரே சபை (எபே.5:27)

நீங்கள் அந்த சபையில் ஒரு அங்கத்தினரா? இல்லையெனில், கர்த்தரின் சபையில் ஒரு உறுப்பினர் எனநீங்கள் எவ்வாறு உரிமை கோர முடியும்? சரியான சபையில் நீங்கள் அங்கத்தினர் இல்லையென்றால், நீங்கள் தவறான ஒரு சபையில் இருக்க வேண்டும். ஆராய்ந்து பாருங்கள்; உங்கள் வேதாகமத்தின் அடிப்படையில் இக்காரியங்களை சரிசெய்து கொள்ளுங்கள்.

எஸ்.எஸ். ராஜன்

*திருமறை ஆசான்*

# திருமறை ஆசான் இதழ் உரிமை பற்றிய அறிக்கை

## திங்களிதழ் விதிப்படிவம் IV

| | | |
|---|---|---|
| வெளியிடும் இடம் | : | 195, தாராபுரம் ரோடு<br>காங்கேயம் - 638 701 |
| அச்சிடுவோர் பெயரும்<br>முகவரியும் | : | ஜீவசக்தி பிரஸ்<br>148-B, கிருஷ்ணம் பாளையம்<br>ஈரோடு - 638 003 |
| வெளியிடுவோர் பெயர் | : | கிறிஸ்துவின் சபை,<br>காங்கயம். |
| இந்திய குடிமக்களா? | : | ஆம் |
| முகவரி | : | 195, தாராபுரம் ரோடு,<br>காங்கயம் - 638 701 |
| ஆசிரியர் பெயர் | : | S. ராஜநாயகம் |
| இந்தியக் குடிமகளா? | : | ஆம் |
| முகவரி | : | 195, தாராபுரம் ரோடு<br>காங்கயம் - 638 701. |
| இதழுக்குரியவர்<br>பெயரும், முகவரியும் | : | கிறிஸ்துவின் சபை,<br>தாராபுரம் ரோடு,<br>காங்கயம் - 638 701. |
| இந்தியக் குடிமக்களா? | : | ஆம் |
| முகவரி | : | 195, தாராபுரம் ரோடு,<br>காங்கயம் 638 701. |

S. ராஜநாயகம் ஆகிய நான் மேலே தந்துள்ள விபரங்கள் நம்பகமும், உண்மையும் உடையவை என உறுதி கூறுகிறேன்.

காங்கயம் (ஒப்பம்)

மார்ச், 1997. S. ராஜநாயகம்

# இனி என்ன நடக்கப் போகிறது?

சமீப காலத்திய அரசியல் நடவடிக்கைகளைப் பற்றி எனது நண்பர் ஒருவர் குறிப்பிடும்போது, "இனி என்ன நடக்கப் போகிறது?" என்று கேட்டார். அது ஒரு சுவையான கேள்வியாக எனக்குத் தோன்றிற்று. என்ற போதிலும், சந்தேகமின்றி, அதுபற்றி அதிகாரப் பூர்வமான கருத்து எதுவும் கூறும் சக்திக்கு நான் உட்பட்டவன் அல்ல. ஆனாலும், ஆத்தும காரியத்தைப் பற்றி அதே கேள்விக்கு விடையளிக்க நமக்குத் தெரியும் : கிறிஸ்து இவ்வுலகுக்கு வந்து, நமக்கு ஒரு முன்னுதாரணமான வாழ்க்கையை வாழ்ந்து காட்டி, தேவனுடைய சித்தத்தின்படியாக, பாவிகளுக்காக சிலுவையில் மரித்தார்; பின் அடக்கம் செய்யப்பட்டு, தேவனின் வல்லமையால், உயிர்த்தெழுந்தார்; பின்னர் பரலோகத்திற்கு தாம் திரும்ப எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னர் தமது சீடர்களை நோக்கி உலகம் எத்திசையிலும் சென்று, சகல நாட்டு மக்களையும் சீடர்களாக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் பெயரால் அவர்களுக்குத் திருமுழுக்குக் கொடுங்கள் ஏனெனில் விசுவாசித்து, திருமுழுக்குப் பெறுகிறவன் இரட்சிக்கப்படுவான் என்று கட்டளையிட்டார். (யோவான் 3:16; 1 பேதுரு 2:21-24; மத்தேயு 28:16-20; மாற்கு 16:14-16). இப்போது, கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்திருந்து, பரலோகத்திற்குச் சென்று விட்டிருக்கிறார். இப்போது, இனி என்ன நடக்கப் போகிறது? இதுபற்றி என் யூகங்களைக் கூறவோ அல்லது ஆருடம் கணித்துச் சொல்லவோ தேவையில்லை. ஏனெனில், இனி என்ன நடக்கப் போகிறது என்பது பற்றி ஏற்கனவே தேவன் பேசியிருக்கிறார்; வேதாகமத்தின் வழியாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

பாவத்திலிருந்து மனிதன் இரட்சிக்கப்பட வேண்டிய பணியை, பரிசுத்த ஆவியானவர் வழியாகவும், மாம்சமான வார்த்தையாகிய தமது குமாரன் இயேசுகிறிஸ்து மூலமாகவும் தேவன் நிறைவேற்றியிருக்கிறார். இப்போது, மனிதன் தனது பங்கைச் செய்ய வேண்டியவனாக இருக்கிறான். அதாவது, பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட, விசுவாசித்து, அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, கிறிஸ்து கற்பித்த பிரகாரமான வாழ்க்கை வாழவும், மரண பரியந்தம் அவருக்கு விசுவாசமுள்ளனாக இருக்கவும் கடமைப்பட்டிருக்கிறான். மரணத்திற்குப் பின்னர், நியாயந்தீர்க்கப்பட விருக்கிறது என வேதாகமம் கூறுகிறது. (எபிரேயர் 9:27) "ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த

நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாம் கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்" (2 கொரி 5:10) "அன்றியும் சகோதரரே, நித்திரயடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை" என்று கூறுகிறார். கிறிஸ்துவின் அப்போஸ்தலர் தொடர்ந்து அவர் கூறும் போது, "இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடே கூடகொண்டு வருவா.:. கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம், நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை. ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார், அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.

பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டு போ-, மேகங்கள் மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம். ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள். சகோதரரே, இவைகள் நடக்கும் காலங்களையும் சமயங்களையும் குறித்து உங்களுக்கு எழுத வேண்டுவதில்லை. இரவிலே திருடன் வருகிற விதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள், சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும் போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிற போல, அழிவு சடிதியாய் அவர்கள் மேல் வரும்; அவர்கள் தப்பி போவதில்லை. "(1 தெசலோ. 4:13-18 ÷ 5:1-3೦° மேலும், உங்களை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கு உபத்திரவத்தையும், உபத்திரவப்படுகிற உங்களுக்கு எங்களோடே கூட இளைப்பாறுதலையும் பிரதிபலனாகக் கொடுப்பது தேவனுக்கு நீதியாயிருக்கிறதே. தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கும், கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும் போது அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்க வராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்க வராயும், அவர் வரும்

போது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்." (2 தெச 1:6-9). மீண்டுமாக, "பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்று போம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்" (2 பேதுரு 3:8-10)

எனவெ, என்றாவது ஒரு நாள் ஆகாயத்திலே, மேகங்களிடையே கிறிஸ்து தோன்றப் போகிறார் என்று நாம் அறிவோம். அவர் பூமிக்குத் திரும்பி வரப் போவதில்லை. ஏனெனில் அவர் வரும் போது பூமி, எரிந்து அழிந்து போகும். அந்நாளிலே தானே, தமது மரணத்திற்குப்பின் கிறிஸ்து தேவனுடைய வல்லமையால் உயிர்த்தெழுந்தது போல, மரணமடைந்த எல்லாரும் உயிர்த்தெழுவர். (யோவான் 5:28-29) அவருக்கு விசுவாசமானவர்கள், அவரோடு சென்று பரலோகத்தில் அவரோடு சதாகாலமும் வாழ, அவரை சந்திக்க ஆகாயத்திலே எடுத்துக் கொள்ளப்படுவர். ஆனால் விசுவாசிகளும், அருவருப்பானவர்களும் உடனடியாக அழிவுக்கு ஏதுவான "அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே" தள்ளப்படுவார்கள். (வெளி. 21:8) இவை அனைத்தையும் பார்க்கும் போது, கிறிஸ்துவின் மரணம், அவருடைய அடக்கம், பின் உயிர்த்து, பரலோகத்திற்கு எழுந்தருளிச் சென்றது, மீண்டும் திரும்பி வருவது போன்ற கிறிஸ்துவின் நற்செய்திகள் எவ்வளவு அருமையாகக் காட்சியளிக்கின்றன! தேவனுக்கு நன்றி சொல்லுவோம்; இப்போது என்ன நடக்கப் போகிறது என்று நமது ஆவிக்குரிய நிலைபற்றி நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. நமக்குத் தெரியும் ஏனெனில் தேவன் அதை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.

சன்னி டேவிட்

*திருமறை ஆசான்*

# “கர்த்தராகிய இயேசுவே, என் இருதயத்தில் வாரும்”

ஒரு மனிதனுடைய இருதயத்தில் இயேசு இருப்பதை விட அதி முக்கியத்துவம் வாய்ந்தது எதுவும் அவனுக்கு இருக்க முடியாது. எனவே, ஒருவனுடைய இருதயத்தில் வாசம் பண்ணுவதைப் பற்றி புதிய ஏற்பாடு போதிக்கிறதை புரிந்து கொள்ளுவதைப் பார்க்கிலும் வேறெதுவும் அவனுக்கு முக்கியமல்ல.

## *தொலைக்காட்சி, வானொலி ஊழியர்கள் :*

வீழ்ந்து போன மக்களிடம், பல தொலைக்காட்சி - வானொலி ஊழியர்கள் ஏறக் குறைய கீழ்க்கண்டபடி சொல்லுவார்கள் : “நீங்கள் அமந்திருக்கும் இடத்திலேயே உங்கள் தலைகளைத் தாழ்த்திக் கொண்டு, நான் சொல்லுவதைத் திருப்பிச் சொல்லுங்கள் : “கர்த்தராகிய இயேசுவே, நான் ஒரு பாவி என்பதை நான் அறிவேன்; எங்கள் பாவங்களுக்காக கல்வாரி மலையில் நீர் மரித்தீர் எனபதை நான் விசுவாசிக்கிறேன். எனது சகல பாவங்களுக்காகவும் நான் மனஸ்தாபப்படுகிறேன். என் பாவங்களுக்காக நான் வருத்தப்படுகிறேன். கர்த்தாவே தயவு செய்து என்னை மன்னித்து என் இருதயத்தில் வாரும்.”

பின்னர் இந்த “ஊழியர்கள்” இது போன்று ஏதாவது கூறுவர் : “இப்போது நீங்கள் ஜெபம் செய்திருப்பதால், இயேசு உங்களை மன்னித்திருக்கிறார்; நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள்; இயேசு உங்கள் இருதயத்துக்குள் வந்து விட்டார்” இது ஒரு மாபெரும் மோசடி என மக்களின் பேரிலுள்ள அன்பால் நான் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். ஏனெனில் கிறிஸ்தவரல்லாதவர்கள் மன்னிக்கப்பட்டு, கிறிஸ்தவர்களாக மாறி, கிறிஸ்துவை தங்களுடைய இருதயங்களில் வரவழைத்துக் கொள்ள இதுதான் வழி என்பதாக வேதாகமத்தில் முற்றிலுமாக ஒரு நிருபணமும் இல்லை. நான் மிகவும் வேதனை அடைகிறேன்; என் இருதயம் வலிக்கிறது. ஏனெனில் தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றில் நடத்தும் இப்படிப்பட்ட போதனைகளால் பல மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள்.

தொலைக்காட்சி போன்ற பிற சாதனங்கள் மூலமாக இவ்வாறு போதித்து, கடைப்பிடிப்பவர்கள் முற்றிலுமாக நேர்மையுள்ளவர்களாக இருக்கக் கூடும். அதே போல இந்த விதமான போதனைகளாலும், நடவடிக்கைகளாலும் ஏமாற்றப்படுவோரும் நேர்மையானவர்களாக இருக்கலாம் என்றாலும், அவர்கள் சரியானதைச் செய்கிறார்கள் என இதற்கு அர்த்தம் இல்லை.

## உணர்வுகளும், நம்பிக்கைகளும் :

ஒருவன் எதை நம்புகிறானோ, அதின் விளைவாகவே அவனுடைய உணர்வுகளும் வரும். இருதயத்தில் உணர்ச்சிகளை உண்டாக்கக்கூடிய சத்தியங்களை அவன் நம்பினால், அவன் சத்தியத்தை விசுவாசித்திருக்கிறான் என்பதற்கு அவனுடைய உணர்ச்சிகள் நிரூபணம் அல்ல. சத்தியத்தை மக்கள் விசுவாசிக்கிறார்கள் என்பதனால் தான் சத்தியமாக இருக்கிறது என்றல்ல. அது உண்மையாக இருப்பதால் தான் அது சத்தியம். மேலும் ஒருவர் விசுவாசித்தாலும் இல்லாவிட்டாலும் சத்தியம் எப்போதும் சத்தியமாகவே இருக்கிறது.

சத்தியம் என நினைத்துக் கொண்டு ஒருவன் தவறை விசுவாசித்தால், அவன் நம்பியது உண்மையிலேயே சத்தியம் என்றே அவனுடைய உணர்வுகளும் இருக்கும்.

## ஜெபம் செய்த சிலர் :

“தேவனே, பாவியாகிய என் பேரில் கிருபையாயிரும்” என்பதாக ஒரு ஆயக்காரன் ஜெபித்தான் என்றும், அந்த ஆயக்காரன் இரட்சிக்கப்பட்டான் அல்லது நீதிமானாக்கப்பட்டான் (லூக்கா 18:13, 14) என்றும் இயேசு சொன்னார். என்ற போதிலும், இந்த ஆயக்காரன் பழைய பிரமாணத்தின் கீழ் அல்லது மோசேயின் பிரமாணத்தின்கீழ் தேவனுடைய ஒரு பிள்ளையாக இருந்தான். இயேசு சிலுவையில் மரித்தபோது, அந்த பிரமாணம் நீக்கப்பட்டது. (எபே. 2; கொலோ 2; யோவான் 1:17) ஆகவே, ஒருவன் எவ்வாறு கிறிஸ்தவன் ஆனான் என்பதற்கோ, தேவனுடைய பிள்ளையாக இல்லாத அல்லது கிறிஸ்தவன் அல்லாத மனிதனிடம் இயேசு எவ்வாறு வருகிறார் என்பதற்கோ இந்த ஆயக்காரனுடைய சம்பவம் ஒரு உதாரணமல்ல.

தமஸ்கு சாலையில் தர்சு பட்டணத்து சவுலுக்கு இயேசு காட்சி அளித்தபின், அவர் ஜெபித்தார். (அப். 9: 10-16) ஆனால் இரட்சிக்கப்படாத ஒருவன் (சவுல் அச்சமயத்தில் இருந்ததைப் போல) தனது பாவங்களிலிருந்து ஜெபத்தின் மூலம் கர்த்தர் இயேசு கிறிஸ்துவால் இரட்சிக்கப்பட்டதாக இந்த நிகழ்ச்சி நிரூபிக்கவில்லை. மாறாக, ஜெபத்தினால் ஒரு பாவி இரட்சிக்கப்படுவதில்லை என்பதற்கு இந்நிகழ்ச்சி ஒரு சான்றாகும். ஏனெனில், கர்த்தராகிய இயேசு தமஸ்கு சாலையில் பவுலிடம், “நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்.” (அப். 9:6)

சவுல் தமஸ்குவிற்குச் சென்று நேர்த்தெருவிலுள்ள யூதாவின் வீட்டில் (அப். 9:11) தங்கியிருந்தபோது, சவுலிடம் சென்று அவன் செய்யவேண்டியவற்றை அவனுக்குத் தெரிவிக்க தமஸ்குவில் அனனியா என்ற சீடனுக்கு கர்த்தர் உத்தரவு கொடுத்தார்.

திருமறை ஆசான்

"கர்த்தராகிய இயேசுவே, நான் ஒருபாவி. என் பாவங்களுக்காக நான் மனஸ்தாபப்படுகிறேன். தயவு செய்து என்னை மன்னித்து என் இருதயத்துக்குள் வாரும் என்று அனனியா சொல்லி, அதைப்போல சவுலும் திருப்பிக் கூறும்படிச் சொன்னானா? இல்லை, மாறாக அனனியா பவுலிடம் கூறினான்: "இப்பொழுது நீ தாமதிக்கிறது என்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்." (அப். 22:16)

கர்த்தருடைய நாமத்தைக் கூறுவது எப்படி என்பதை அனனியா தர்சு பட்டணத்து பவுலிடம் செய்யச் சொன்னது தெளிவாக நமக்குக் காட்டுகிறது. ஒருவன் திருமுழுக்குப் பெறும் போது, அந்த நாமத்தை தொழுது கொள்ளுகிறான் அல்லது அந்த நாமத்தையோ அல்லது இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தையோ சார்ந்திருக்கிறான். அவன் கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றபடியால் (ரோமர் 6:3), இயேசுவின் இரத்தத்தின் இரட்சிக்கும் வல்லமையை அவன் அடைகிறான். (எபே. 1:7)

இவ்வாறு செய்யாத தொலைக்காட்சி, வானொலி ஊழியர்கள் அனைவரும் கிறிஸ்துவின் இரத்தத்தால் அவர்களுடைய பாவங்கள் கழுவப்பட தர்சு பவுல் செய்ததைப் போலசெய்ய வேண்டும். பின்னர் கிறிஸ்துவுக்குள் அல்லாத, மனம் வருந்துகிற எல்லா விசுவாசிகளிடமும் அனனியா பவுலுக்குச் சொன்னதைப் போல சொல்ல வேண்டும்! மாறாக, இக்கட்டுரையின் இரண்டாவது பாராவில் கூறப்பட்டது போல ஒரு ஜெபத்தை தங்களோடு திருப்பிச் சொல்ல வேண்டுமென்று சொல்லக் கூடாது.

## கிறிஸ்து நம்மில் வருகிறார் :

தர்சு பவுல் செய்ததைப் போல ஒருவன் செய்யும் போது கிறிஸ்து அவனுடைய இருதயத்தில் வருகிறார். விசுவாசத்தினால் கிறிஸ்தவர்களின் இதயங்களில் கிறிஸ்து வாசம் செய்கிறார். (எபே. 3:17) இது ஒருவனுடைய உணர்ச்சிகள் அல்ல, ஆனால் விசுவாசத்தினால் ஏற்படுகிறது என்பதை புதிய ஏற்பாட்டை படித்தால் புரிந்து கொள்ளலாம். தேவனுடைய வார்த்தையைக் கேட்பதால் இந்த விசுவாசம் வருகிறது. (ரோமர் 10:17)

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவினாலும், கிறிஸ்து அவர்களிலும் இருப்பதாகத் தேவனுடைய வசனம் கற்பிக்கிறது. (கொலோ 1:2, 27) எனவே, தேவனுடைய வார்த்தை இதைக் கூறுகிறது என்பது மட்டுமே இது சத்தியம் என்பதற்கான ஒரே ஆதாரமாக இருக்கிறது.

கிறிஸ்துவில் ஒரு கிறிஸ்தவன் இருப்பதாக, அல்லது கிறிஸ்து அவனில் இருப்பதாக அவன் விசுவாசிக்கும் போது அவன் நல்லதை உணர்கிறான்.

அவ்வாறு அவன் உணர்வதற்கு தேவனின் வசனம் அவன் கிறிஸ்துவிலும் கிறிஸ்து அவனிலும் இருப்பதாகக் கூறுவதே நிருபணமாகும்.

கிறிஸ்து நமது இருதயங்களில் எபப்டி வாசம் செய்யக்கூடும் என்பதையோ, நாம் கிறிஸ்துவில் எவ்வாறு வாசம் செய்கிறோம் என்பதையோ நாம் புரிந்து கொள்ளவோ அல்லது இதை விளக்கவோ தேவையில்லை. தேவனுடைய வார்த்தை இவற்றைக் கூறுவதால் நாம் இரண்டையுமே நம்பலாம். விசுவாசத்தினால் இரண்டையுமே நாம் ஏற்றுக் கொள்ளுகிறோம். இந்த பெரிய காரியங்களில் தேவன் இதைப் பற்றி என்ன கூறினாரோ அப்படி நடப்பதே நாம் செய்யக் கூடிய காரியம்.

Basil Oveton

எஸ்.எஸ். ராஜன்

## கிறிஸ்துவின் சபை வசனத்தின்படியான அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டுள்ளது.

### I. ஒரு நல்ல அஸ்திபாரத்தின் முக்கியத்துவம் :

ஒரு கட்டிடமோ அல்லது ஒரு அமைப்போ நல்ல முறையில் அஸ்திபாரம் போடப்பட்டு கட்டியிருந்தால் அது நன்கு உறுதியாக நீண்ட நாட்கள் நிலைத்திருக்கும் என்பது பேருண்மை. அதனுடைய அஸ்திபாரத் தன்மை நிச்சயமாக அதன் அஸ்திபாரத்தையே சாரும். அஸ்திபாரமில்லாமல் எந்த வீடும் நிச்சயமாக கட்டமாட்டார்கள். சபையும் இதற்கு விதிவிலக்கல்ல. அதனுடைய ஸ்திரத்தன்மையானது அதனுடைய அஸ்திபாரத்தை சார்ந்துள்ளது.

ஆவிக்குரிய வசனத்தின்படியான ஒரு சபைக்கு ஆவிக்குரிய வசனத்தின்படியான அஸ்திபாரம் தேவை. அப்படியில்லையெனில் அந்த சபை நிச்சயமாக சத்தியத்தின் படியான சபையல்ல. இந்த சபையில் ஒரு மனுஷன் வசனத்தின் படியாகத் தான் உறுப்பினராக ஆகமுடியுமே தவிர தானாக தன்னை சபையில் ஒருவன் அங்கத்தினர் என்று சொல்லிவிட முடியாது.

### II. கன்மலை அல்லது அஸ்திபாரம் என்றால் என்ன?

கன்மலையென்ற பதத்தை "நாம் சற்று விரிவாக ஆராய்ந்து பார்க்க பேதுருவின் அறிக்கையைப் பார்ப்போம்" நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து (மத் 16:16) என்று அவர் கிறிஸ்துவை பார்த்து சொன்னவுடனேயே பேதுருவை பார்த்து கிறிஸ்து சொன்னார். நீ பேதுருவாய் இருக்கிறாய் இந்தக் கல்லின் மேல் என் சபையை கட்டுவேன் என்றார். இங்கே கல்லென்பது பேதுருவைப் பார்த்து

சொன்ன அறிக்கையையோ அல்லது பேதுரு கிறிஸ்துவைப் பார்த்து சொன்ன அறிக்கையையோ குறிப்பிடும். அநேகர் இந்தக் கல் என்பது பேதுருவைக் குறிக்கிறது என்று வாதிடுவார்கள். இங்கே பேதுரு (peter) என்ற சொல்லுக்கு பாறை அல்லது கல் என்று பொருள். ஆனால் மூல பாஷையில் இந்தக் கருத்தில் சொல்லப்படவில்லை. காரணம் இரண்டு வித்தியாசப்பட்ட சொற்கள் உபயோகப்படுத்தப் பட்டுள்ளது. "நீ பேதுருவாய் (Petros) இருக்கிறாய் இந்தக் கல்லின் (Rock) மீது என் சபையை கட்டுவேன் (மத் 16:18) என்று எழுதப்பட்டிருப்பதால். இயேசுவானவர் பேதுருவின் மீது என் சபையை கட்டுவேன் என்று வாக்குதத்தம் செய்யவில்லை. மாறாக இந்தக் கல்லின் மேல் (rock (or) petra) என்று செல்லுகிறார். மறக்க முடியாத மாபெரும் உண்மை யாதெனில் கிறிஸ்து தேவனுடைய குமாரன். ஆகவே அவருடைய சபையானது பலவீனமுள்ள மனுஷ அஸ்திபாரத்தின்மீது நிச்சயமாக கட்டப்படமாட்டாது. மாறாக தெய்வீக வல்லமை பொருந்திய குமாரனாகிய கிறிஸ்து என்ற கன்மலையான அஸ்திபாரத்தின் மீது கட்டப்பட்டுள்ளது.

மற்ற திருவசனங்கள் மூலமாகக் கூட அநேக சான்றுகளை நாம் பெற முடியும். "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது (I கொரி 3:11) அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களு மாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக் கல்லாயிருக்கிறார்;" (எபேசி 2:20), "வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று" (சங்க 118:22) இயேசு இந்த தீர்க்க தரிசனத்தை தமக்கே பொருந்தும்படி பேசினார் (மத் 2:42) பேதுருகூட இதை கிறிஸ்துவுக்கு பொருந்தும்படி கூறியுள்ளார் (அப் 4:11) இந்தச் சான்றுகள் நமக்குப் போதுமானவைகளாயிருக்கிறது.

## III. இந்த அஸ்திபாரமே என்றும் நிலைத்திருக்கக் கூடியது

1. கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்ற அஸ்திபாரமே என்றென்றைக்கும் நிலைத்து நின்று உறுதியான கட்டிடமாக எழும்புகிறது. இந்த கட்டிடத்தின் மீது கொடுக்கப்பட்ட தாக்குதல்கள் இதை ஒன்றுமே செய்ய இயலவில்லை. 2. விசுவாசிகளும், கடவுள் இல்லையென்று சொல்லுகிறவர்களும் புதுமைக் கருத்துடையோரும், கிறிஸ்தவத்தின் மீது நம்பிக்கையற்றவர்களும் கிறிஸ்தவத்தை மிகவும் மோசமாக பேசினாலும் கடுமையாக திட்டினாலும் இயேசு கிறிஸ்து மெய்யான ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகத்தானிருக்கிறார். இந்தக் கன்மலை இந்த அஸ்திபாரம் உறுதியாகவும் பாதுகாப்பாகவும் என்றென்றைக்கும் நிலைத்து நிற்க கூடியதாக இருக்கிறது.

2. வித்தியாசப்பட்ட ஒரு உதாரணத்தை நாம் இப்பொழுது பார்ப்போம் 'வால்டேன் ஒருமுறை பெருமையாக சொன்னார். இன்னும் 100 ஆண்டுகளில் வேதாகமத்தின் ஒரு பிரதிகூட காணமுடியாது என்று, ஆனால் இன்றைக்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகள் முடிந்து விட்டன. எந்த அச்சகத்தின் மூலமாக வால்டேர் இந்த தேவ தூஷணமான வார்த்தைகளை வெளியிட்டானோ அந்த அச்சகமே இன்றைக்கு ஜெனிவா வேதாகமக் சங்கமாக (Genera Bible Society) மாறியிருக்கிறது காரணம் கன்மலையான கிறிஸ்துவின் அஸ்திபாரம் அசைக்க முடியாத அஸ்திபாரம்.

3. ஆனால் மனிதனால் ஏற்படுத்தப்படுகிற அமைப்புகள் பற்றி நாம் பார்க்கும் போது, அவைகள் மணலின் மேல் கட்டப்பட்டவைகள். அஸ்திபாரமானது வலுவில்லாததாக இருக்கிறபடியினால் சீக்கிரத்தில் விழுந்து விடும். ஆனால் கிறிஸ்துவின் சபையோ மகிமையான சபையாக என்றைக்கும் நிலைத்திருக்கும். காரணம் அது சோதிக்கப்பட்ட கல்லும் விலையேறப்பட்ட கல்லுமான ஜீவனுள்ள கல்லாகிய கன்மலையான கிறிஸ்து என்ற அஸ்தி பாரத்தின் மீது அஸ்திபாரம் போடப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு நீ எந்த அஸ்திபாரத்தின் மீது உன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்தை கட்டுகிறாய்?

உன்னை நிதானித்துப்பார்

வே. தானியேல் துரைராஜ், திருச்சி.

## இதயத்து எண்ணங்கள்

நல்ல மரம் கெட்ட கனி கொடாது. கெட்ட மரம் நல்ல கனி கொடாது. அந்தந்த மரம் அதினதன் கனிகளால் அறியப்படும். முட்செடிகளில் அத்திப் பழங்களைப் பறிப்பாருமில்லை. நெருஞ்சிச் செடியில் திராட்சைப் பழங்களை அறுப்பாரும் இல்லை. நல்ல இதயமாகிய பொக்கிஷத்திலிருந்து நல்ல மனிதன் நல்லதை எடுத்துக்காட்டுகிறான். பொல்லாத மனிதன் பொல்லாத இருதயமாகிய பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக் காட்டுகிறான். இருதயத்தின் நிறைவிலிருந்து வாய் பேசும்.

லூக்கா 6:43 45

# 4. பிரசங்கியின் பிரசங்க வகைகள்

பிரசங்கியானவர் இன்ன பிரசங்கம் இன்ன வகை என்று பிரசங்கங்களை விதவிதமாய் வகுப்பது எப்படி என்று அறிந்து கொள்ள வேண்டும். இப்படி வகுப்பதை அறிந்திருந்தால் பிரசங்கி தான் அறிந்திருக்கிற விசயங்களை ஒழுங்குடன் சபையாரிடம் கூறமுடியும். பிரசங்கங்களை பற்பல வகையாய் வகுத்துக் கொள்வதினால் வேளைக்கு வேளை வெவ்வேறு விதமான விசயங்களைக் குறித்து பிரசங்கிக்க எதுவுண்டாகும். பிரசங்கம் இன்ன வகையென்று தீர்மானிப்பதினால் வேறு வகையான பிரசங்கத்திற்குரிய பொருளையும், நடையையும் அதோடு குழப்பாதபடி உதவியாயிருக்கும்.

இன்ன பிரசங்கம் இன்ன வகை என்று வகுப்பதினால் கேட்கின்ற சபையார் அதிக கவனத்தோடும், உற்சாகத்தோடும் பிரசங்கம் முடியும் வரை காது கொடுத்துக் கேட்பார்கள். பிரசங்க கலை என்பது அறுசுவை உணவைப் போல வகை, வகையாயிருக்கிறது. வகை, வகையான உணவை வேண்டாம் என வெறுத்தவர் யாருமில்லை. பிரசங்கி வகை, வகையான விருந்தைக் கொடுக்கிறவர் போல தனது பிரசங்க வகைகளை படைக்க வேண்டும். அப்பொழுதுதான் தனது பிரசங்கத்தில் சாரமேறி மிகவும் ருசியுடன் இருக்கும்.

பிரசங்க வகைகளாவன

### *1. தலைப்பு பிரசங்கம் :*

இந்த வகைப் பிரசங்கம் ஒரு குறிப்பிட்ட தலைப்பின் கீழ் பிரசங்கிப்பது. உதாரணமாக சுவிசேஷம் என்ற தலைப்பில் சுவிசேஷம் என்றால் என்ன? என்றும் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய என்ன செய்ய வேண்டும்? என்றும் சுவிசேஷத்தினால் வரும் சுதந்திரம் என்ன? என்றும் பிரசங்கிக்கலாம். இவ்வகைப் பிரசங்கம் கேட்போரை கீழ்படியச் செய்யும். பிரசங்கியின் வேத அறிவை முழுமையாக பயன்படுத்த உதவியாயிருக்கும். பிரசங்கி தனது ஆரம்பகால ஊழியத்தில் இவ்வகை பிரசங்கத்தை அதிகமாய் பயன்படுத்திக் கொண்டால் ஊழியத்தில் நல்ல பலன் கிடைக்கும்.

### *2. பாடவாக்கிய பிரசங்கம் :*

இவ்வகைப் பிரசங்கம் தொகுப்பு பிரசங்கம் அல்லது தொடர்பு பிரசங்கம் என்றும் அழைக்கப்படுவதுண்டு. இந்த வகையில் பிரசங்கமானது ஒரு வசனத்தில் கூறப்படும் தொடர் வாக்கியத்தை வைத்து பிரித்து, பிரித்து விளக்கமாக பிரசங்கிப்பதாகும். உதாரணமாக 1. தெச 1:2ல் பவுல் நினைவு கூர்ந்தது. A.

விசுவாசத்தின் கிரியை B. அதன்பின் பிரயாசம் C. நம்பிக்கையின் பொறுமை இவ்வகைப் பிரசங்கத்தினால் வரும் பலன் வசனத்தை கேட்கின்றவர்களின் மனதில் நிலை நிறுத்தும்படி செல்கிறது. சபையின் பக்தி விருத்திக்கும், சபையின் வளர்ச்சிக்கும் பெரிதும் பயனுள்ளதாயிருக்கும்.

### *3. விளக்கவுரை பிரசங்கம் :*

இவ்வகைப் பிரசங்கம் பிரசங்கியின் வேத அறிவை பரீட்சை செய்யக்கூடியது. தான் கற்ற சத்தியத்தை விளக்கிக் கூறுவதாகும். இவ்வகைப் பிரசங்கத்தில் போதகன் மிகவும் கவனமாக, ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஏனெனில் சில சமயங்களில் பிரசங்கி தன்னை அறியாமல் வேதவசனத்திற்கு புறம்பாக மிதமிஞ்சி விளக்கமளித்து விடுவார். எனவே இவ்வகைப் பிரசங்கம் மிகவும் கவனமாக பிரசங்கிக்க வேண்டும். வேத வசனத்திற்கு வசனமே விளக்கம் கூற ஒழுங்குபடுத்த வேண்டும்.

உதாரணமாக ஞானஸ்நானத்தின் விளக்கம் வசனமே கூறவேண்டும். ஞானஸ்நானம் என்பது அடக்கம் பண்ணப்படுதல் (ரோம 6:1-3) அது கிறிஸ்துவோடு உயிர்தெழுதலின் தண்ணீருக்குள் இறங்க வேண்டும் (அப் 8:38) தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்பட்டு தண்ணீரிலிருந்து வெளியே வரவேண்டும். (அப் 8:39) இதுவே ஞானஸ்நானத்தின் விளக்கம்.

இப்படிப்பட்ட விளக்கவுரை பிரசங்கத்தினால் கேட்போருக்கு சத்தியத்தை விளக்கமாக கூற முடியும். கேட்டவருக்கும், பிரசங்கித்தவருக்கும் நிம்மதி ஏற்படும். கேட்டவர் பாராட்டுவார் பிரசங்கித்தவர் உற்சாகமடைவார். இவ்வகை பிரசங்கத்திற்கு பிரசங்கி அதிகமாக தன்னை ஆயத்தப்படுத்தவும், அதிகமாக வேத அறிவை பெற்றுக் கொள்ளவும் அவசியமாயிருக்கிறது.

### *4. சரித்திர பிரசங்கம் :*

இவ்வகைப் பிரசங்கம் நடந்த உண்மைச் சம்பவங்களை கருத்து மாறாமல் பிரசங்கிப்பதாகும். இந்த பிரசங்கத்திற்கு பிரசங்கி வேதத்தில் சொல்லப்படும் எல்லா சம்பவங்களையும் படித்து மனப்பாடம் செய்து தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வகைப் பிரசங்கத்தினால் சபையில் அமைதியையும், சிறுவர் முதற் கொண்டு பெரியோர் வரைக்கும் எல்லாருடைய கவனத்தையும் ஈர்த்துக் கொள்ள முடியும். கேட்கின்ற அனைவரும் மிகவும் ஆர்வத்துடனும், ஆச்சரியத்துடனும் கவனிப்பார்கள். பிரசங்கி தன்னிடத்தில் இருக்கும் தேவ அறிவை முழுதிறமையுடன் காண்பிக்க முடியும்.

*மார்ச், 1997*

### 5. உபதேசப் பிரசங்கம் :

கிறிஸ்தவ மார்க்கத்துக்குரிய சத்தியங்களை விஸ்தரித்துக் காட்டும் பிரசங்கம், உபதேசப் பிரசங்கமாகும். புதிய ஏற்பாட்டு சத்தியங்களை மனுஷருக்குப் போதிப்பது பிரசங்கியின் வேலையில் முக்கியமான பாகமாதலால் ஒவ்வொரு போதகனும் உபதேசங்களை மிகுந்த பிரயாசத்தோடும் யோசனையோடும் பிரசங்கிப்பது அவசியமாகும். இதற்கு பிரசங்கி தகுந்த ஆயத்தத்தோடு இருக்க வேண்டும். பிரசங்கி தான் அனுதினமும் சந்திக்கிற மனுஷருக்கு எதை போதிக்கலாம் என தடுமாறாமல் தான் வழக்கமாக சந்திக்கும் மனுஷர்களுக்கு சுவிசேஷம், விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கையிடுதல், ஞானஸ்நானம் என்று வரிசைபடுத்தி ஒவ்வொரு முறையும் ஞானமாக போதிக்க இவ்வகைப் பிரசங்கம் பெரிதும் உதவும். இவ்வகைப் பிரசங்கத்தினால் தேவனுடைய வெளிப்பாடாகிய கிறிஸ்துவின் சபையை மக்களுக்கு அடையாளம் காண்பிக்க உதவியாயிருக்கும்.

### 6. ஜீவிய சரித்திரப் பிரசங்கம் :

இவ்வகைப் பிரசங்கம் ஒரு தனிப்பட்ட தேவ மனிதனின் ஜீவிய சரித்திரத்தைக் காண்பிப்பதாகும். உதாரணமாக மோசேயின் ஜீவிய சரித்திரம், யோசுவாவின் ஜீவிய சரித்திரம் போன்றவற்றை போதிப்பதாகும். இவ்வகைப் பிரசங்கத்திற்கு பிரசங்கியானவன் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற தேவனுடைய மனிதர்களின் வரலாற்றை நன்கு அறிந்து மனப்பாடம் செய்திருக்க வேண்டும். இவ்வகைப் பிரசங்கம் கேட்போரை உணர்வடையச் செய்கிறது. கேட்போருக்கு நேரம் போவது தெரியாமல் இருக்கும் பிரசங்கிமார்களே உங்களது பிரசங்கம் ஆறுவகையான சுவைமிக்க பதார்த்தமாயிருக்க வாழ்த்துக்கள்.

கே. பாஸ்கர்

## பாக்கியவான்

கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

அவன் தண்ணீரண்டையில் நடப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும் மழைத் தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனிகொடுக்கிறதுமான மரத்தைப் போலிருப்பான்? எரே 17: 7, 8.

# எல்லா சபைகளிலும் இருக்கிற நல்லவர்கள் எல்லாம் இரட்சிக்கப்படுவார்களா?

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுவதற்கு முன்பூ இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுகிற தகுதி எனக்கோ இந்த உலகில் வேறு எவருக்குமோ அல்லது குழுவினருக்கோ இல்லை. என்பதை எல்லா மனத் தாழ்மையுடனும் ஒப்புக்கொள்ளுகிறேன். கிறிஸ்து ஒருவருக்கே அத்தகுதி உண்டு என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வோம். ஏனெனில் அவரே நியாயாதிபதி. (அப்17:31)

இருப்பினும், எனது நண்பர்களும், உறவினர்களும்பல்வேறு சபைகளில் அங்கம் வகிக்கிறார்கள். அவர்களில் பலர் மிகுந்த பக்தி வைராக்கியமும், ஆர்வமும் உள்ளவர்கள். கர்த்தருடைய காரியங்களுக்குத் தாராளமாய்க் கொடுக்கிறவர்கள். ஆனாலும் பவுல் அப்போஸ்தலன் கூறுவது போல் "தேவனைப் பற்றி அவர்களுக்கு வைராக்கியம் உண்டென்று அவர்களைக் குறித்து சாட்சி சொல்கிறேன். ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல. எப்படியெனில், அவர்கள் தேவநீதியை அறியாமல் தங்கள் சுயநீதியை நிலை நிறுத்தத் தேடுகிறபடியால் தேவனுக்குக் கீழ்படியாதிருக்கிறார்கள். (ரோமர் 10:2,3) என்று வருத்தத்தோடே சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

இப்படிச் சொல்லும்போது, நான் மற்றவர்களை நியாயம் தீர்க்கிறேன் என்று தயவு செய்து என்மீது ஆத்திரப்படாதீர்கள். "நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாட்களில் நியாயம் தீர்க்கும்" (யோவான் 12:48) என்பதை நான் மறந்துவிடவில்லை. ஆயினும் நாம் நேசிக்கிற உறவினர்களோ, நண்பர்களோ தேவனுடைய சித்தத்தை அறியாமலும், அல்லது தேவனுடைய கட்டளைகளைப் புரிந்து கொள்ளாமல் தடுமாறினாலும், கவலையீனமாக இருந்தாலும், அவர்கள் பேரில் உள்ள கரிசனையால் அவர்களுக்கு சத்தியத்தை எடுத்துரைத்து தேவனுடைய சித்தத்தைப் புரிய வைத்து, தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியத் தூண்டுவதும் நம்முடைய கடமையன்றோ

அப்போஸ்தலனாகிய பவுல், தன் இனத்தாரின் தவறான வைராக்கியத்தைக் குறித்து "எனக்கு மிகுந்த துக்கமும், மனவேதனையும் உண்டாயிருக்கிறது." (ரோமர் 9:1) என்கிறாரே. அது போன்ற ஒரு பந்த பாசத்தால் இதைப் பற்றி எழுதத் துணிந்தேன்.

முதலாவதாக, "எல்லா சபைகள்" என்பதே வேத வாக்கியத்துக்கு முரணானது. சபை ஒன்று தான் (எபே 4:4) அதில் ஒரே சரீரம் என்று தானே

இருக்கிறது என்பீர்கள். அவசரப்படாமல் அதே நிருபம் 1ம் அதிகாரம் 23ம் வசனத்தையும் வாசியுங்கள். அங்கே 'சரீரமாகிய சபை' என்று இருக்கிறதைக் கவனியுங்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் 'என் சபையைக் கட்டுவேன்' என்று ஒருமையில் தான் சொல்லியிருக்கிறார். (மத் 16:18) அது இயேசு உயிர்த்தெழுந்த பிறகு வந்த முதல் பெந்தே கொஸ்தே பண்டிகையன்று வேத வசனத்தின்படி எருசலேமில் ஸ்தாயிக்கப்பட்டது (அப் 2:41-47) அந்தச் சபையை வேதம் கிறிஸ்துவின் சபை என்று அழைக்கிறது. (ரோமர் 16:16)

உண்மை இவ்வாறு இருக்க இன்று மனிதன் பல நிறுவனங்களை அமைத்துக்கொண்டு அவைகளுக்குச் சபை என்ற பெயரைச் சூட்டி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது சுய ரத்தத்தைக் கொண்டு சம்பாதித்த தேவனுடைய சபையைக் கொச்சைப்படுத்திமகிழ்கிறான். (அப் 20:28) இன்றைக்கு மனிதனால் நிறுவப்பட்ட சற்றேறக்குறைய நானூறு நிறுவனங்கள் சபைகள் என்று கூறிக்கொண்டு மக்களைக்குழப்புவதால் கிறிஸ்து கட்டிய உண்மையான சபை எது? என்று கண்டுபிடிக்க முடியாமல் தடுமாறுகின்றனர். இது இரட்சிப்புக்குத் தூணும் ஆதாரமாக இருக்கிற கிறிஸ்துவின் சபையை நோக்கி மக்கள் வராதபடி மக்களை வஞ்சிக்க சத்துருவாகிய சாத்தான் செய்யும் சதித் திட்டமேயன்றி வேறல்ல.

இந்தச் சமயத்தில் பழைய ஏற்பாட்டில் கடந்த ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. புகழ் பெற்ற சாலமோன் அரசனுக்குப் பிறகு அவன் குமாரன் ரெகொபெயாம் அரசுக் கட்டில் ஏறுகிறான். அவனுடைய மதியீனமான போக்கினால் இஸ்ரவேல் சாம்ராஜியம் இரண்டாக உடைந்து, வடபகுதிக்கு யெரொ பெபயாம். அதிபதியானான். ஆனாலும் அவனுக்கு ஒரு பயம் மக்கள் எருசலேமில் உள்ள தேவாலயத்துக்குப் போக்கு வரவாக இருந்தால் அரச பரம்பரையைச் சேர்ந்த ரெகொபெயாம் மீது அன்பும் மதிப்பும் ஏற்பட்டு, நாளடைவில் மக்கள் அவன் பக்கம் சாய்ந்து விட்டால் ஆபத்து என்று நினைத்தான். ஆகவே அவன் மக்களை எருசலேம் தேவாலயத்துக்குப் போய்த் தொழவேண்டிய அவசியம் உண்டாகாதபடி, தடுத்து நிறுத்த ஒரு தந்திரம் செய்தான், விக்கிரக கோவில்களைக் கட்டி எகிப்தின் தெய்வங்கள் என்று நம்பப்பட்ட கன்றுக்குட்டிகளுக்கு, ஓரிஜினல் நாடாகிய யூதாவில் ஆசரிக்கப்படும் பண்டிகைக் கொப்பாக எட்டாம் மாதம் பதினைந்தாம் தேதியில் பண்டிகை கொண்டாடி, மேடையிலே பலியிட்டான். மக்களைப் பார்த்து, நீங்கள் எருசலேமுக்குப் போகும் சிரமம் வேண்டாம். இங்கேயே தொழுங்கள். என்று திசை திருப்பினான். அதே நாளில் பண்டிகை, ஆர்ப்பாட்டம், அலறல், வேடிக்கை! மக்களுக்கு இது போதுமே. தேவன் நமது ஆராதனையை ஏற்றுக் கொள்கிறாரா, இல்லையா? அதைப் பற்றி யாருக்குக் கவலை? (1 ராஜா 12:26-33).

திருமறை ஆசான்

இன்றைக்கும் அதுவே நிலை. பிழைக்கத் தெரிந்த சில சுய நலவாதிகள், மக்களுடைய மடமையையும், மெத்தனத்தையும் பயன்படுத்திக் கொண்டு, தேவனுடைய ஸ்தானத்திற்கு தங்களை உயர்த்திக் கொண்டு மக்களுடைய மனநிலைக் கேற்ப தேவனுடைய நீதிச் சட்டங்களின் வீரியத்தைக் குறைத்து திருத்தம் செய்து மக்கள் கூட்டத்தைத் திரளாய்ச் சேர்த்துக் கொள்கிறார்கள். இவர்களின் தந்திரங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் பலரும், புரிந்து கொண்ட சிலர் அதிலுள்ள ஓட்டைகளின் வழியாய் கசிந்து வருவதை ருசித்துக் கொண்டும் இரசித்துக் கொண்டும் இப்படிப்பட்ட நிறுவனங்களில் அங்கம் வகித்துக் கொண்டு தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொண்டு போலி திருப்தியோடு உலா வருகின்றனர்.

இவர்களுக்கு கற்பிக்கப்படுகிற உபதேசங்களில் அநேகம் வேத வசனத்துக்குப் புறம்பானவைகள். மிக முக்கியமானவைகள் என்று வேதம் குறிப்பிடுகிற சில உபதேசங்கள் அவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறதேயில்லை என்பது மிகவும் வேதனையாயிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அவர்களுக்கு அதைச் சுட்டிக்காட்டி அவர்களைச் சரியான பாதையில் போகும்படி ஆலோசனை கூறுவது நியாயம் தீர்ப்பது அல்ல; நல்லெண்ண மன்றாட்டே (யாக் 5:20)

சான்றோர்களே! அரசு அங்கீகாரம் இல்லாத ஒரு பள்ளியில் உங்கள் பிள்ளைகளைச் சேர்ப்பீர்களா? அல்லது இரண்டும் இரண்டும் ஐந்து என்றோ, தமிழ்நாடு ஐரோப்பா கண்டத்தில் இருக்கிறது என்றோ ராஜீவ்காந்தி, மகாத்மா காந்தியின் பேரன் என்றோ போதிக்கப்படுகிற பள்ளிக்கு உங்கள் பிள்ளைகளைத் தொடர்ந்து அனுப்புவீர்களா? நிச்சயமாக மாட்டீர்கள். ஆனால் சபையா? அதைப்பற்றி என்ன ஐயா, எல்லாம் இயேசு சாமியைத் தானே கும்பிடுகிறான். மாதாவையும் கும்பிடுகிறானோ, அது அவன் சௌகரியம் என்று சொல்லுகிறீர்களே, வேண்டாம் சகோதரனே, சகோதரியே! ஆன்மீகக் காரியங்களை அப்படி அசட்டை செய்ய வேண்டும். தயவு செய்து லாசரு ஐசுவரியவான் கதையை ஊன்றி வாசியுங்கள் (லூக் 16:27-31 வரை உள்ளதைச் சிந்தியுங்கள்.

இரண்டாவதாக சிறு குழந்தையாக இருக்கும்போது ஞானஸ்நானம் என்ற பெயரால் தலையில் தண்ணீர் தெளிக்கப்பட்டவர்கள் எல்லாம் இரட்சிக்கப்பட்டு சபைக்குள் இருக்கிறேன் என்று எண்ணிக்கொண்டிருப்பது தவறான எண்ணம். மாற்கு சுவிசேஷம் 16:16, "விசுவாச முள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" என்று தெளிவாகப் போதிக்கிறது. இதில் இரண்டு தவறான போதனைகள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. ஒன்று ஞானஸ்நானம் செய்விக்கப் பட்டவனுடைய வயதும் புரிந்து கொள்ளும் தன்மையும். (2) திருமுழுக்கு என்று அர்த்தம் கொள்ளும் ஞானஸ்நானம் செய்விக்கப்பட்ட முறை.

"விசுவாசமுள்ளவனாகி" என்றால், சொல்லப்படுகிற சத்தியத்தைப் புரிந்து கொண்டு நம்பிக்கை தெரிவிக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு ஞானஸ்தானம் கொடு என்று பொருள்ாகும். ஒரு சிறு குழந்தை சொன்னதைக் கேட்டு விசுவாசிக்குமா? புரிந்து கொள்ளுமா? அதற்குத் தான் பெற்றோர்கள் பொறுப்பு எடுக்கிறோமோ! என்பீர்கள். அதற்கு எங்கே ஐயா, ஆதாரம்? இயேசு கிறிஸ்துவே முப்பது வயதில் தானே திருமுழுக்குப் பெற்றுக் கொண்டார்? (லூக் 3:23) வேதத்தின் காரியங்களை வேதத்தின்படி செய்வது தானே நியாயம். நம் இஷ்டம் போல செய்து கொள்வதற்கு அதிகாரம் எங்கே? எல்லா அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிறாரே இயேசு (மத் 28:19) ஆகவே குழந்தை ஞானஸ்நானத்தை இனிமேலாவது கைவிடுங்கள்.

இரண்டாவது ஞானஸ்நானம் கொடுக்கும் முறை திருமுழுக்கு அல்லது ஞானஸ்நானம் என்றசொல்லுக்கு மூல மொழியாகிய கிரேக்க மொழியில் Baptizo (பாப்டிஸோ) என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு அமுக்குதல் அல்லது மூழ்கடித்தல் என்று பொருள். சிறு குழந்தையில் தலைமேல் இரண்டு சொட்டு தண்ணீர் தெளித்து திருமுழுக்குக் கொடுத்தாயிற்று என்று சொன்னால் அது எப்படி நியாயமாகும்? இயேசுவைக் கிறிஸ்து என்று விசுவாசிக்கும் மனப்பக்குவம் இல்லாத பச்சிளங்குழந்தையின் தலை மீது இரண்டு சொட்டுத் தண்ணீரைத் தெளித்து இது தான் ஞானஸ்நானம் என்று நானும் நீங்களும் ஒத்துக் கொண்டாலும் வேத வசனம் ஏற்றுக் கொண்டு இரட்சிப்புத்தருமா? "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியானாலும் பிறவா விட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டான்" என்கிறார் இயேசு (யோவான் 3:5)

ஒருவனுடைய பிரவேசமே தவறு என்று ஆகும்போது அவன் இரஜ்ஜியத்தின் ஆசிர்வாதங்களைப் பெற்றுக் கொள்வது எப்படி? "ஒருவன் மல் யுத்தம் பண்ணினாலும் சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடி சூட்டப்படான் (1தீமோ 2:5) என்று பவுல் தீமோத்தேயு என்ற இளம்பிரசங்கிக்கு எழுதுகிறார். பந்தையத்தில் முறைப்படி உன்னைப் பதிவு செய்து கொள்ளாமலும் பந்தயம் நடத்துபவரின் நிபந்தனைக்குக் கட்டுப்படாமலும் ஓடினால் பரிசு எப்படி கிடைக்கும்? இன்று அனேக கிறிஸ்தவர்கள் முறைப்படி பதிவு செய்து கொள்ளாத ஓட்டக்காரனைப் போல் கர்த்தருடைய உபதேசச் சட்டத்தின்படி செய்யாமல் கிறிஸ்தவ ஓட்டத்தை ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் பரிசு பெறுவது முடியாத காரியம். ஒருவேளை பரிசுத்த் வேதாகமத்தை அனுதினமும் நீங்கள் வாசித்து தியானிப்பதால் உங்கள் வாழ்க்கை மற்றவர்களுடைய வாழ்க்கையைக் காட்டிலும் சிறப்பாக இருக்கலாம். அதற்கு நீங்கள் பரிசுத்த வேதாகமத்தைத் தான் படிக்க வேண்டும் என்பதில்லை, அழகிய தமிழில் உள்ள திருக்குறள், முஸ்லிம்களின் வேத புத்தகமாகிய குரான், ஹிந்து மதத்தினரின்

பகவத் கீதை போன்ற நூல்களே கூடப் போதும். இந்த உலகத்தில் மகிழ்ச்சியாக, உல்லாசமாக, ஆரோக்கியமாக, வாழ வேண்டும் அது தானே உங்கள் இலட்சியம்!

வேதாகமம் படிப்பது இம்மைக்காக மட்டுமல்ல (1 கொரி 15:19) மறுமையிலும் நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்கு ஆயத்தம் செய்திருக்கிற நித்திய வீட்டைப் பெற்றுக் கொள்வதற்கும் அவருடைய ஆளுகையில் பங்கு கொள்வதற்கும் ஆகும்.

ஆகவே என் நண்பனே, சகோதரியே! உன்னுடைய கிறிஸ்துவ ஓட்டம் வேதாகம உபதேசச் சட்டத்தின்படியும் நிபந்தனைகளின்படியும் பதிவு செய்யப்பட்ட ஓட்டம் தானா? தயவுசெய்து வேதாகமத்தின் வெளிச்சத்தில் அதை சரிபார்த்துக் கொள்ளுங்கள். "நான் வீணாக ஓடினதும், வீணாகப் பிரயாசப் பட்டதும் இல்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவவசனத்தைப் பிடித்துக் கொண்டு உலகத்திலே சுடர்களைப் போல பிரகாசிக்கிற நீங்கள்.

கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும், கபற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு

எல்லாவற்றையும் (தேவனுடைய உபதேசச் சட்டங்கள் அனைத்தையும்) முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்" (பிலி 2:14-16)

**E.S. செல்வநாயகம்**

## அறிவுரை

*ஆதலால் கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்கிற புத்தி என்னவென்றால். நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாய் நடந்து மிகுந்த மனத் தாழ்மையும், சாந்தமும், நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். எபே 4:13*

## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted ar Erode HPO on 20,
THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## -: அஞ்சல் வழி வேதாகமக் கல்வி :-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை" ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

Published by Church of Christ, Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

If undelivored Please return to
The Editor phone : (04257) 20030
THIRUMARAI AASAAN
POST BOX No. 27, KANGAYAM - 638 701

PRINTED MATTER

BOOK - POST